தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவலர் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோருதல்

1) பணி விவரம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவல் பணிக்கு தனியார் நிறுவன வழி காவலர்களை அனுப்ப இரு உறை வழி ஒப்பந்தப்புள்ளி கோருதல். விண்ணப்பிக்கும்பொழுது ஒரு உறையில் நிறுவனத்தின் தகுதி குறித்த விண்ணப்பப்படிவம் மற்றும் வைப்புத்தொகை வைக்கப்பெறவேண்டும். மற்றொரு உறையில் விலை விவரம் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். உறையின் மேல்பகுதியில் நிறுவனத்தின் விவரம், விலை விவரம் என்றும் குறிப்பிடவேண்டும்.

2) தகுதிகள்

1) நிறுவனம் 5 பெரும் நிறுவனங்களில் பணி செய்தமைக்கான சான்று இணைக்க வேண்டும்.
2) குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் இந்த பணி செய்தமைக்கான சான்று இணைக்க வேண்டும்.
3) தனியார் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும் அதற்கான சான்று இணைக்க வேண்டும்.
4) கடந்த முன்று ஆண்டுகளில் ரூ. **50.00** இலட்சத்திற்கு குறையாமல் டர்ன்ஒவர் செய்திருக்க வேண்டும்.
5) கடந்த **3** ஆண்டுகள் வருமான வரி செலுத்தியற்கான பார்ம் **16** இணைக்க வேண்டும்
6) ஜிஎஸ்டி எண் பதிவு செய்யப்பெற்ற நிறுவனம் என்பதை சான்று இணைக்க வேண்டும்.
7) சேவை வழங்கிய நிறுவனத்தில் கலங்கமில்லா சான்று பெற்றிருக்க வேண்டும்.

3) ஒப்பந்தக் காலம் : ஒப்பந்தம் வழங்கப்படும் நாளிலிருந்து ஓராண்டு

4) வைப்புத் தொகை : விண்ணப்பிக்கும் போது ரூ. **10>000/–** க்கான வைப்புத் தொகை ரொக்கமாக செலுத்த வேண்டும்.

5) வைப்புத் தொகை ஒப்பந்தம் வழங்கப்படும் நிறுவனத்திற்கு வைப்புத்தொகையை ஓராண்டு முடிந்தவுடன் ரொக்கமாக மீள வழங்கப்படும்.

6 ) ஒப்பந்த திறப்பு விவரம்

முதலில் விண்ணப்பத்தாரரின் தகுதிகள் அடங்கிய உறை பிரிக்கப்படும் அனைத்து தகுதிகளையும் பெற்ற நிறுவனத்தின் விலை விவரம் உறை மட்டும் பின்னர் திறக்கப்படும்

7) ஒப்பந்தப்புள்ளி திறக்கபடும் நாள்: **27.12.2018** மதியம் **2.00** மணி

8) ஊதியம் வழங்கப்படும் விவரம் : பணி செய்ததற்கான ஊதியம் மாதந்தோறும் வழங்கப்படும்

காவலர் பணி குறித்த விவரம்

1) காவலர்களின் குறைந்தபட்ச கல்வித் தகுதி **8** ஆம் வகுப்பு தேர்த்தி பெற்றிருக்க வேண்டும்
2) **50** வயதுக்கு கீழ் உள்ளவர்களையே காவலர்களாக பணியமர்த்தப்பட வேண்டும். பணியமர்த்தப்படவுள்ள காவலர்களின் வயது கல்வி மற்றும் ஆதார் விவரம் அளிக்க வேண்டும்.
3) எட்டு மணி நேரத்திற்கு ஒரு காவலர் பணியில் இருத்தல் வேண்டும் 12 மணிநேரம் அளித்தல் கூடாது அவ்வாறு இருப்பின் தங்களுக்கு வழங்கப்பட்ட பணி ஆணை உடன் இரத்துச் செய்யப்படும்.
4) காவலருக்கான இஎஸ்ஐ (**ESI)** பிஎப் (**PF)** முதலியவை ஒப்பந்தப் புள்ளி அளிக்கும் தொடர்புடைய நிறுவனங்கள் செலுத்த வேண்டும். பணியமர்த்தப்பட்ட காவலர்களது பெயரிலியேயே இஎஸ்ஐ (**ESI** ) பிஎப் (**PF)** செலுத்தப்படவேண்டும் அதற்கான சான்று மூன்று மாதத்திற்கு ஒரு முறை அளித்தல் வேண்டும்.
5) சீருடைகள், காலணிகள் மற்றும் விளக்கு ஆகியவற்றை கட்டாயமாக வழங்க வேண்டும்.
6) காவல் பணியின்பொழுது பொருட்கள் களவு போனால் அந்த பொருட்களுக்கு தொடர்புடைய நிறுவனவே பொறுப்பேற்க வேண்டும்.
7) முன்னாள் இராணுவத்தினரைப் பயன்படுத்தும் நிறுவனத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

முடிவு

1) வரப் பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தது.
2) பல்கலைக்கழகத்தினர் அவ்வப்போது வகுக்கப்படும் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு நடக்கவேண்டும்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவலர் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பப்படிவம்

அனுப்புநர்

பெறுநர்

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஐயா,

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவல் பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தகுதிகள் குறித்த பின்வரும் சான்றுகளை இத்துடன் இணைத்துள்ளேன்.

1) நிறுவனம் 5 பெரும் நிறுவனங்களில் பணி செய்தமைக்கான சான்று
2) குறைந்த பட்சம் **3** ஆண்டுகள் இந்த பணி செய்தமைக்கான சான்று .
3) தனியார் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும் அதற்கான சான்று .
4) கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. **50.00** இலட்சத்திற்கு குறையாமல் டர்ன்ஓவர் செய்தமைக்கான சான்று.
5) கடந்த 3 ஆண்டுகள் வருமான வரி செலுத்தியற்கான பார்ம் **16**
6) ஜிஎஸ்டி எண் பதிவு செய்யப்பெற்ற நிறுவனம் என்பதற்கான சான்று
7) எந்த நிறுவனத்திலும் பணியாற்றிய காலத்தில் கலங்கமில்லாமல் பணியாற்றியதற்கான சான்று
8) வைப்புத் தொகை ரூ.10,000/– நேரில் செலுத்தியுள்ளேன்.
9) ஒப்பந்தப்புள்ளியில் காவலர் பணி குறித்த தெரிவிக்கப்பட்ட ஒன்பது இனங்களுக்கும் எனது இசைவினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

# தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவலர் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில் விலை விவரம் தெரிவித்தல்

அனுப்புநர்

பெறுநர்

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ஐயா,

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காவல் பணி ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட பணிக்கான விலை விவரம் பின்வருமாறு .

1) ஒரு காவலருக்கு எட்டு மணி நேரம் பணியாற்ற கோரும் தொகை

2) 36 காவலர்களுக்கு ஒரு திங்களுக்கு கோரும் தொகை

தங்கள்உண்மையுள்ள